## ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழா

'யூதர்களின் அரசராகப் பிறந்திருப்பவர் எங்கே? அவரது விண்மீன் எழக்கண்டோம்' மத்.2:2

முதல் வாசகம் : ஏசாயா60:1–6

அக்காலத்தில் ஆண்டவர் கூறியதாவது: எழு! ஒளிவீசு! உன் ஒளி தோன்றியுள்ளது. ஆண்டவரின் மாட்சி உன்மேல் உதித்துள்ளது! இதோ! இருள் பூவுலகை மூடும்; காரிருள் மக்களினங்களைக் கவ்வும்; ஆண்டவரோ உன்மீது எழுந்தருள்வார்; அவரது மாட்சி உன்மீது தோன்றும்! பிற இனத்தார் உன் ஒளிநோக்கி வருவர்; மன்னர் உன் உதயக் கதிர்நோக்கி நடைபோடுவர். உன் கண்களை உயர்த்தி உன்னைச் சுற்றிலும் பார்; அவர்கள் அனைவரும் ஒருங்கே திரண்டு உன்னிடம் வருகின்றனர்; தொலையிலிருந்து உன் புதல்வர் வருவர்; உன் புதல்வியர் தோளில் தூக்கி வரப்படுவர். அப்பொழுது, நீ அதைக் கண்டு அகமகிழ்வாய்; உன் இதயம் வியந்து விம்மும்; கடலின் திரள் செல்வம் உன்னிடம் கொணரப்படும்; பிற இனத்தாரின் சொத்துகள் உன்னை வந்தடையும். ஒட்டகங்களின் பெருந்திரள் உன்னை நிரப்பும்; மிதியான், ஏப்பாகு ஆகியவற்றின் இளம் ஒட்டகங்களும் வந்து சேரும்; இளம் நாட்டினர் யாவரும் பொன், நறுமணப்பொருள் ஏந்திவருவர். அவர்கள் ஆண்டவரின் புகழை எடுத்துரைப்பர்.

பதில்பாடல்: திருப்பாடல்72:1-2,7-8.10-11,12-13

ஆண்டவரே எல்லா இனத்தாரும் உமக்கு ஊழியம் செய்வார்களாக

இரண்டாம் வாசகம்: ஏபேசியர்3:2-3,5-6

சகோதர சகோதரிகளே! உங்கள் நலனுக்காகக் கடவுளின் அருளால் எனக்களிக்கப்பட்ட பொறுப்பைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள் என எண்ணுகிறேன். அந்த மறைபொருள் எனக்கு இறை வெளிப்பாட்டின் வழியாகவே தெரியப்படுத்தப்பட்டது. அதைப்பற்றி நான் ஏற்கெனவே சுருக்கமாக உங்களுக்கு எழுதியிருக்கிறேன். அந்த மறைபொருள் மற்ற தலைமுறைகளில் வாழ்ந்த மக்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், இப்போது தூய ஆவி வழியாகத் தூய திருத்தூதருக்கும் இறைவாக்கினருக்கும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நற்செய்தியின் வழியாக, பிற இனத்தாரும் கிறிஸ்து இயேசுவின் மூலம் உடன் உரிமையாளரும் ஒரே உடலின் உறுப்பினரும் வாக்குறுதியின் உடன் பங்காளிகளும் ஆகியிருக்கிறார்கள் என்பதே அம்மறைபொருள்.

நற்செய்தி: மத்தேயு2:1-12

ஏரோது அரசன் காலத்தில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தார். அப்போது கிழக்கிலிருந்து ஞானிகள் எருசலேமுக்கு வந்து, யூதர்களின் அரசராகப் பிறந்திருக்கிறவர் எங்கே? அவரது விண்மீன் எழக் கண்டோம். அவரை வணங்க வந்திருக்கிறோம் என்றார்கள். இதைக் கேட்டதும் ஏரோது அரசன் கலங்கினான். அவனோடு எருசலேம் முழுவதும் கலங்கிற்று. அவன் எல்லாத் தலைமைக் குருக்களையும், மக்களிடையே இருந்த மறைநூல் அறிஞர்களையும் ஒன்றுகூட்டி, மெசியா எங்கே பிறப்பார் என்று அவர்களிடம் விசாரித்தான். அவர்கள் அவனிடம் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் அவர் பிறக்க வேண்டும். ஏனெனில், யூதா நாட்டுப் பெத்லகேமே, யூதாவின் ஆட்சி மையங்களில் நீ சிறியதே இல்லை; ஏனெனில், என் மக்களாகிய இஸ்ரயேலை ஆயரென ஆள்பவர் ஒருவர் உன்னிலிருந்தே தோன்றுவார் என்று இறைவாக்கினர் எழுதியுள்ளார் என்றார்கள். பின்பு ஏரோது யாருக்கும் தெரியாமல் ஞானிகளை அழைத்துக்கொண்டுபோய் விண்மீன் தோன்றிய காலத்தைப் பற்றி விசாரித்து உறுதி செய்து கொண்டான். மேலும் அவர்களிடம். நீங்கள் சென்று குழந்தையைக் குறித்துத் திட்டவட்டமாய்க் கேட்டு எனக்கு அறிவியுங்கள். அப்பொழுது நானும் சென்று அக்குழந்தையை வணங்குவேன் என்று கூறி அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பி வைத்தான். அரசன் சொன்னதைக் கேட்டு அவர்கள் புறப்பட்டுப் போனார்கள். இதோ! முன்பு எழுந்த விண்மீன் தோன்றிக் குழந்தை இருந்த இடத்திற்கு மேல்வந்து நிற்கும்வரை அவர்களுக்கு முன்னே சென்று கொண்டிருந்தது. அங்கே நின்ற விண்மீனைக் கண்டதும் அவர்கள் மட்டில்லாப் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள். வீட்டிற்குள் அவர்கள் போய்க் குழந்தையை அதன் தாய் மரியா வைத்திருப்பதைக் கண்டார்கள்; நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து குழந்தையை வணங்கினார்கள்; தங்கள் பேழைகளைத் திறந்து பொன்னும் சாம்பிராணியும் வெள்ளைப் போளமும் காணிக்கையாகக் கொடுத்தார்கள். ஏரோதிடம் திரும்பிப் போக வேண்டாம் என்று கனவில் அவர்கள் எச்சரிக்கப்பட்டதால் வேறு வழியாகத் தங்கள் நாடு திரும்பினார்கள்.

தியானம்: இன்று தாய்திருச்சபை ஆண்டவரின் திருக்காட்சிப் பெருவிழாவை கொண்டாடி மகிழ்கின்றது. 'இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போருக்கு ஒளிதரவும் நம்முடைய கால்களை அமைதிவழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது' (லூக்.1:78-79);. இறைவனின் மாட்சியைத் தொலைத்து இருளில் மறைந்துபோன மனுக்குலத்தைத் தேடிவந்த இயேசு ஒரு குழந்தையாக இந்த உலகத்திற்கு வந்தார். அவரது இறைமாட்சியை இயற்கை அடையாளம் கண்டு கொண்டது, விண்மீன் சுட்டிக்காட்டியது. ஆனால் இருளான சாத்தானுக்கு தங்களையே அடிமைகளாக தங்களை விற்றுவிட்ட ஏரோது போன்ற அதிகார, ஆணவ வெறியர்கள், போலி மதவாதிகள் பொய்மைக்கு தூதுபோன மனிதர்கள் கடவுளின் மாட்சியாக விளங்கிய இயேசுவைக் கண்டு கொள்ளவில்லை. இயேசுவே இந்த பாவ உலகில் இருந்து நம்மை மீட்டு மீண்டும் தந்தையிடம் சேர்க்கவிருக்கும் மெசியா என்பதை அறிந்து கொண்ட மூன்று அறிஞர்கள் உலகின் கடைகோடியில் இருந்து ஆண்டவராம் இயேசுவைத் தேடிவந்து தெண்டனிட்டு வணங்கி பொன், தூபம், வெள்ளைப்போளம் போன்றவற்றை பரிசாக வழங்கி வாழ்த்துகிறார்கள், மீட்பரை அடையாளப்படுத்துகிறார்கள். வாழ்க்கை என்பது ஒரு தொடர் தேடல். நாம் எதைத் தேடுகின்றோம் என்பதைப் பொறுத்து நமது வாழ்க்கையின் திருப்பங்கள் அமையும். பெரும்பான்மையான மனிதர்கள் இன்று பணம், பதவி, பெயர், புகழ், செல்வாக்கு, உறவு இவற்றினைத் தேடிக்கொண்டு ஓடிக்கொண்டு இருக்கிறார்கள். இதனை பெறுவதற்காகவும் மேலும் இவற்றினைத் தக்கவைத்துக் கொள்வதற்கான முயற்சியில்

வாழ்க்கையை இழந்து தவிக்கின்றார்கள். 'மனிதரில் நம்பிக்கை வைப்போரும் வலுவற்ற மனிதரில் தம் வலிமையைக் காண்போரும் சபிக்கப்படுவர். ஆண்டவரே இஸ்ரயேலின் நம்பிக்கையே உம்மைப் புறக்கணித்தோர் யாவரும் வெட்கமுறுவர்;;, உம்மைவிட்டு அகன்றோர் தரையில் எழுதப்பட்டோர் ஆவர் ஏனெனில் அவர்கள் வாழ்வளிக்கும் நீரூற்றாகிய ஆண்டவரைப் புறக்கணித்தார்கள்.' (எரே.17:5,13). 'மனிதரின் மீது நம்பிக்கை வைப்பதைவிட ஆண்டவரிடம் தஞ்சம் புகுவதே நலம்' (திபா.118:8) என்ற திருப்பாடல் ஆசிரியரின் வழிகாட்டுதலுக்கு இணங்கி நமது மத்தியில் பிறந்திருக்கும் 'ஆண்வரைத் தேடுங்கள் நீங்கள் வாழ்வீர்கள்' (ஆமோ.5:6) உன் கடவுளாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கிறார். அவர் மாவீரர், மீட்பு அளிப்பவர். தம் அன்பினால் உனக்கு புத்துயிர் அளிப்பார். (செப்.3:17) என்ற இறைவார்த்தையில் நம்பிக்கைவைத்து கடவுளின் மாட்சியின் சுடரொளியாக விளங்கும் இயேசுவை நம் வாழ்க்கையில் தேடிக் கண்டுகொள்வோம், அவரது மாட்சியில் பங்குபெறுவோம்.